1992 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் நீங்கள் கேள்வி கேட்கிறபோதே உங்களிடம் கேட்டேன். திருவாரூரில் பெண்கள் கல்லூரி ஆரம்பிப்பது பற்றிய கேள்வி இது. நீங்கள் கேட்பதற்கு அவரிடம் பதில் இருக்காது. தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா எண் 223. திரு. செ. து. வரதராஜன்—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

223—

மாசுக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடங்கள்.

*4496 திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாசுக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடங்கள் தமிழகத்தில் செயல்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் அவை இயங்குகின்றன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகங்கள் சென்னை, மதுரை, சேலம், மறைமலைநகர், அம்பத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இது தவிர, ஆறு நடமாடும் ஆய்வுக்கூடங்கள் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திண்டுக்கல், ஓசூர் மற்றும் மணலி போன்ற இடங்களில் இயங்கி வருகின்றன.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு நகரில் நான்கு புறங்களில் இருந்து சாலைகள் வந்து சேருகின்றன. தெற்குப் புறத்தில் சாராய பேக்டரியின் துர்நாற்றம் செங்கல்பட்டு நகரைத் தாக்குகிறது. வடக்குப் பகுதியில் லைட் ரூபிங் கம்பெனியினுடைய தார் சுடும் துர்நாற்றமும், குப்பைகளின் நாற்றமும் செங்கல்பட்டு நகரைத் தாக்குகின்றன. கிழக்குப் பகுதியில், கிளிஞ்சல் சுண்ணாம்பு சுடுவதும், மாட்டு இறைச்சியின் துர்நாற்றமும் செங்கல்பட்டு நகரைத் தாக்குகின்றன. மேற்குப் பகுதியில் எல். ஜி

[1992 மார்ச் 16

ரப்பர் பேக்டரியினுடைய ரப்பர் சுடும் நாற்றமும், இரவெல்லாம் காஸ் விடுபட்டு நாற்றமும் வருவதால், அங்கேயிருக்கின்ற மக்களுடைய சுகாதாரம் மிகவும் சீர்கேடு அடைந்து இருக்கின்றது. செங்கல்பட்டில் சுமார் 60 ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். இது நீண்ட நாளாக இருக்கிற கோரிக்கை. இந்தத் தொழிற்சாலைகள் அனைத்தும் மிகுந்த வசதி படைத்தவர்களுக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தினாலும், அரசியல் செல்வாக்கு அவர்களுக்கு இருப்பதாலும், இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து வரும் துர்நாற்றத்தைத் தடுக்க....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன், இது துணைக் கேள்வி. என்ன கேள்வி கேட்க வேண்டும் என்பது தெரிந்து தொடர்புடைய துணைக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. செ. து. வரதராஜன்: ஆகவே அரசு நடவடிகை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக புகார்கள் வந்திருந்தால் மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து இருக்குமென்று நான் நம்புகிறேன். ஒருவேளை இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படாமலோ அல்லது புகார்கள் வராமலோ இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களை எழுத்து மூலமாக இப்போதே என்னிடம் கொடுத்து விட்டால் மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கிற சாராய பேக்டரி உடையாருக்குச் சொந்தமானது. அங்கேயிருந்து ஏற்படுகிற துர்நாற்றத்தை தெற்குப் பகுதியிலிருந்து செங்கல்பட்டுக்கு வருகிற அத்தனை பேரும் அறிவார்கள். அது இரவாக இருந்தாலும் சரி, பகலாக இருந்தாலும் சரி, எந்த நேரத்திலும் அந்த நாற்றத்தை நுகர்ந்த உடனேயே, செங்கல்பட்டு வந்து விட்டது என்று அறியும் உணர்வு இங்கே இருக்கிற அத்தனை பேருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே அந்த துர்நாற்றத்தால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு சாராய பேக்டரியில் இருந்து வெளியேறுகிற கெமிக்கல் வாட்டர், பக்கத்தில் இருக்கிற ஆற்றில் கலக்கிறது. அப்படிக் கலந்து, செங்கல்பட்டு பக்கத்தில் இருக்கிற வேதநாராயணபுரம் பம்ப்பிங் ஸ்டேஷனிலும் அந்த கெமிக்கல் கலந்திருக்கிற காரணத்தால், அங்கேயிருந்து எடுக்கப்படுகிற தண்ணீரின் நிறமே மாறிப்போய், தண்ணீரின் சுவையும் மாறிவிட்டது. அந்தத் தண்ணீரை அருந்தினால்

1992 மார்ச் 16]

இன்னும் 30 ஆண்டுக் காலத்திற்குள் அங்கே இருக்கின்றவர்களுடைய பற்கள் விழுந்து போகும் என்று மெடிக்கல் சர்டிபிகேட்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தண்ணீர் பரிசோதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைக் குடிக்கலாம் என்று சர்டிபிகேட் தருகிறார்கள். தயவுசெய்து இப்போதுகூட நீங்கள் வந்து பார்க்கலாம். இரண்டு கிளாஸ்களில் எடுத்துப் பார்த்தால் கலர் நன்றாகத் தெரியும். இவர்கள் எப்படி அந்தத் தண்ணீர் நன்றாக இருக்கிறது என்று சர்டிபிகேட் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே இது மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறிப்பிட்ட தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இப்போதே உடனடியாக மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அங்கே சென்றுபார்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்து மூலமாக இதைக் கொடுத்திருந்தால் அதற்கான நடவடிக்கை எடுத்திருக்க முடியும். இப்போது அவர்கள் எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, கோயம்புத்தூரில் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வுக்கூடம் நடமாடும் ஆய்வுக்கூடமாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். தென்னிந்தியாவினுடைய மான்செஸ்டர் என்று புகழ் பெற்ற கோவை நகரம் பெரிய தொழில்கள் நிறைந்த நகரம். அங்கே நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால், சிமெண்ட் தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால் அங்கே மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிரந்தர ஆய்வுக்கூடத்தை அமைக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் உள்ள நடமாடும் ஆய்வுக்கூடம் கோயம்புத்தூருக்குள்ளேதான் நடமாடிக் கொண்டிருக்கும். வெளியே போகாது. எனவே ஓர் இடத்திலே இருப்பதைவிட வசதியாக அந்தந்த இடத்திலே இருக்கின்ற காற்று ஆகியவற்றையெல்லாம் பார்ப்பதற்கு வசதியாக இருப்பது நடமாடும் ஆய்வுக்கூடம் என்பது. எனவே நிரந்தரமாக இருப்பதைவிட நடமாடும் ஆய்வுக்கூடமாக இருப்பதே வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது நடமாடும் ஆய்வுக் கூடங்கள் பல இடங்களிலே இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிக அளவு தொழிற்சாலைகள் எங்கள் தொகுதியான சிவகாசி தொகுதியிலேதான் இருக்கின்றன. மேலும் ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலையும் உள்ளது. அங்கே புகை மண்டலமாகக் கிளம்பி கிட்டத்தட்ட 20 மைல் தூர சுற்றளவிற்கு ஆஸ்துமா நோயையும் மற்றும் கேன்சர் நோயையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் கட்டுப்படுத்தும்படி மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே ஆய்வுக்கூடம் என்பது அங்கங்கே இருக்கிற கழிவு நீர் சுத்தம் செய்யப்படுகிறதா, இன்னும் எவ்வளவு சுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஆய்வு செய்வதற்கு மட்டுமே இருக்கிறது. அந்த ஆய்வுக்கூடங்கள் எந்த இடத்திலேயிருந்தும் கழிவுநீர் போன்ற மற்றவற்றையும் எடுத்துக் கொண்டு வந்து அந்த ஆய்வுக்கூடங்களிலே நம்மாலே ஆய்வு செய்ய முடியும். பல இடங்களிலேயிருந்து கொண்டு வருவதற்கு கஷ்டமாக இருக்கிறது என்பதால்தான் வாரம் ஒரு முறை இந்த நடமாடும் ஆய்வுக் கூடங்கள் அங்கே போய்ப் பார்க்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடங்களில் இது போன்ற பிரச்சினைகள் இருக்குமானால் அந்தத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுப்பார்கள். தேவைப்பட்ட எந்தப் பொருளையும் ஆய்வுக் கூடத்திலே கொண்டு வந்து அதை ஆய்வு செய்வதற்கு ஒழுங்கான நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 224 திரு. என். பன்னீர் செல்வம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

224—

வன உயிரியல் பட்டமேற்படிப்பு முடித்த மாணவர்கள்.

*4342 திரு. என். பன்னீர் செல்வம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;